# அருள்மிகு அஷ்டலட்சுமி திருக்கோயில்
## (அருள்மிகு மகாலட்சுமி திருக்கோயில்)
### பெசன்ட் நகர், சென்னை– 90
**போன் : 044 – 2446 6777, 2491 7777**

**<u>தீபாவளி திருவிழா – செய்திக் குறிப்பு</u>**

திருப்பாற்கடலில் இருந்து அவதாரமான திருமகள் என அழைக்கப்படும் ஸ்ரீ மகாலட்சுமி சதுர்த்தி அன்று தோன்றினாள். அவள் தோன்றியதும் 'ஓம் ' என்ற பிரணவ ஒலி ஒலிக்கத் தொடங்கியது.

அடுத்த நாள் திருமகள் திருமாலைக் கைப்பிடித்தாள். அந்த நாளே தீபாவளித் திருநாளாகக் கொண்டாடப்படுவதாகப் பலவகைப் புராணங்கள் கூறுகின்றன.

புது மணமக்கள் எண்ணெய் தேய்த்துப் புத்தாடை உடுத்தி இனிப்புகளுடன் உற்சாகப்படுத்தப்படுகின்றனர்.

திருக்கோயில்களில் இலக்குமி சன்னதிகளில் ஹோமம் வளர்த்து திருக்கல்யாணம் செய்வது மரபு.

வட இந்தியர்கள் தீபாவளி அன்று புதுக்கணக்கு தொடங்குவார்கள்.

அன்று லக்ஷ்மியை வரவேற்றுத் தங்கள் வீட்டில் தங்க வேண்டும் என்பதற்காக **'லக்ஷ்மி பூஜை'**யைச் செய்கிறார்கள்.

தமிழ்நாட்டிலும் லக்ஷ்மியின் திருக்கல்யாணத்தைக் கொண்டாடும் வகையில் அதிகாலை வேளையில் பிரம்ம முகூர்த்தத்தில் லக்ஷ்மியை தீபத்தில் வரவழைத்து அவளை தீபலக்ஷ்மியாக வழிபட்டு, எண்ணெய் தேய்த்து குளித்து புத்தாடை உடுத்தியும், இனிப்புகள் வழங்கியும் மகிழ்கிறோம்.

இது தமிழ்நாட்டில் இந்துக்களிடையே நடைபெற்று வரும் இலக்குமி வழிபாடாகும்.

தென்னகத்தில் லட்சுமிக்கு என அமைந்த ஒரே தனிப்பெருங்கோயில், சென்னை பெசன்ட்நகரில் அமைந்துள்ள **ஸ்ரீ மகாலட்சுமி திருக்கோயில்** ஆகும். அஷ்டலட்சுமி திருக்கோயில் என்றும் அழைக்கப்படுகிறது.

' ஓம் ' என்னும் பிரண வடிவில் அமைந்துள்ள தரிசனப் பாதையும், எப்போதும் அதையே ஒலித்துக் கொண்டு இருக்கும் கடலை திருக்குளமாகக் (சமுத்திர புஷ்கரணி ) கொண்டும் 8 வகை சக்திகளின் ஒருமித்த வடிவமாக வெவ்வேறு திருவுருவங்களில் சக்திகளை வாங்கி, அது அனைத்தையும் கருவறை என்னும் முக்கிய சன்னதியில் ஸ்ரீ மகாலட்சுமி மகாவிஷ்ணுவின் மூலம் பலன்களை வாரி வழங்கும் தெய்வம் ஸ்ரீ மகாலட்சுமி ஆகும்.

இத்திருக்கோயிலில் 18.10.2017 அன்று தீபாவளி பண்டிகை முன்னிட்டு காலை 6.30 மணி முதல் சன்னதிகள் பக்தர்கள் வசதிக்காக தரிசனத்திற்காக திறக்கப்படும்.

கட்டணமில்லா சேவையும், கட்டணச் சேவையும் எவ்வித பாகுபாடும் இல்லாமல் தரிசனம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆதிலட்சுமி முதல் அனைத்து லட்சுமி சந்நிதிகளிலும் அந்தந்தச் சந்நிதிகளுக்குரிய சிறப்போடு அலங்காரங்களும் செய்யப்பட உள்ளன. அஷ்டலட்சுமிகளையும் தரிசனம் செய்தபிறகே மற்ற சன்னதிகளை தரிசிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பெருமாள், மகாலட்சுமி, அஷ்டலட்சுமிகள் சன்னதி ஆகிய அனைத்து மூர்த்தங்களுக்கும் சிறப்பு அபிஷேகம், சிறப்பு புத்தாடைகள் அணிவிக்கப்பட்டு சிறப்பு அலங்காரம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலவசப் பிரசாதம் வழங்கவும், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் குடிப்பதற்காகவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பக்தர்கள் நலன் கருதி தட்டுப்பந்தல், கியூ வரிசை, பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியவை செய்யப்பட்டுள்ளன.

திருக்கோயில் முழுவதும் வண்ண விளக்குகளால் ஒளிரூட்டுதல், வாழை மரம், மாவிலைத் தோரணங்கள் மற்றும் விழாவினை முன்னிட்டு விளம்பர தட்டிகள் (பேனர்) வைத்து பொது மக்கள் நன்கு அறியும் வண்ணம் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

**<u>18.10.2017 தீபாவளி பண்டிகை நிகழ்ச்சி நிரல்</u>**

| | | |
|---|---|---|
| காலை 6.30 மணிக்கு | : | விஸ்பரூப தரிசனம் |
| காலை 8.00 முதல் 9.30 மணி வரை | : | சிறப்பு பூஜை மற்றும் பிரசாத விநியோகம் |
| பகல் 12.00 மணிக்கு | : | சிறப்பு அன்னதானம் |
| மாலை 4.00 மணிக்கு | : | சிறப்பு அலங்கார தரிசனம் |
| இரவு 9.00 மணிக்கு | : | சயனப் பூஜை |

பெருந்திரளான சேவார்த்திகள் / பக்தர்கள் வருகையை எதிர்பார்த்து சிறப்பு ஏற்பாடுகள் மற்றும் காவல் துறையினரும் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டு உள்ளன.

பக்தர்கள், "தாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக" என்பதற்கேற்ப, மற்றவர்கள் தரிசனம் செய்வதற்கு இடையூறு செய்யாவண்ணம் தரிசனம் செய்ய ஒத்துழைக்குமாறும், திருக்கோயில் நிர்வாகத்திற்குப் பூரண ஒத்துழைப்பு நல்கிடுமாறும் அன்புடன் வேண்டுகிறோம்.

**<u>19.10.2017 லட்சுமி பூஜை நிகழ்ச்சி நிரல்</u>**

| | | |
|---|---|---|
| காலை 6.30 மணிக்கு | : | விஸ்பரூப தரிசனம் |
| காலை 8.00 முதல் 9.30 மணி வரை | : | சிறப்பு பூஜை மற்றும் பிரசாத விநியோகம் |
| பகல் 12.00 மணிக்கு | : | சிறப்பு அன்னதானம் |
| மாலை 4.00 மணிக்கு | : | சிறப்பு அலங்கார தரிசனம் |
| மாலை 6.00 மணிக்கு | : | சிறப்பு சாயங்கால பூஜை |
| இரவு 9.00 மணிக்கு | | சயனப் பூஜை |

இத்தகவல்களை தங்கள் ஊடகத்தின் வாயிலாக பொதுமக்கள் அறியும் வகையில் தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**மு. ஜோதிலட்சுமி**
**தக்கார் / உதவி ஆணையர்**

**எஸ். மதனகோபால்**
**செயல் அலுவலர்**